# அரசுத் தேர்வுகள்இயக்ககம், சென்னை– 6

## மே –2022 –பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு

## சமூகஅறிவியல்

### பகுதி– 1

14 X 1 = 14
மதிப்பெண்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆ | P.ரெங்கையா | 1 |
| 2 | இ | சி.ராஜாஜி | 1 |
| 3 | அ | லெனின் | 1 |
| 4 | இ | 1806 ஜூலை 10 | 1 |
| 5 | ஆ | (i), (ii) மற்றும் (iii) | 1 |
| 6 | ஈ | கரிசல் மண் | 1 |
| 7 | ஆ | எஃகு தயாரிப்பு | 1 |
| 8 | இ | போர்காட் | 1 |
| 9 | ஈ | கரூர் | 1 |
| 10 | இ | இலங்கையை | 1 |
| 11 | இ | சட்டப்பிரிவு 360 | 1 |
| 12 | இ | 30 வயது | 1 |
| 13 | இ | புதிய பொருளாதார கொள்கை | 1 |
| 14 | இ | (i), (iii) மற்றும் (iv) | 1 |

### பகுதி – 2

10 x 2 = 20
மதிப்பெண்

| | | |
|---|---|---|
| 15 | 1. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உள்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது.<br>2. வேளாண் உற்பத்திப் பொருள்களின் விலைபாதியாகக் குறைந்தது.<br>3. விவசாய விளைபொருட்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய பணம் இரண்டு மடங்காயிற்று. | 2 |
| 16 | 1. சதி எனும் உடன்கட்டை ஏறுதல்.<br>2. பெண்ணடிமைத்தனம்.<br>3. குழந்தை திருமணம்.<br>4. விதவை பெண்கள் மறுமணம்.<br>5. பலதார திருமணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றார். | 2 |
| 17 | சதாரா, சம்பல்பூர், ஜான்சி, நாக்பூர், பஞ்சாபின் சில பகுதிகள் | 2 |
| 18 | 1. பெரியார் குழந்தை திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார்<br>2. பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்குபெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார். | 2 |

<table>
<tr><td>19</td><td>1. 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கப்பற்படைத் தளமான முத்து துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும் தாக்குதலை தொடுத்தன.<br>2. இத்தாக்குதலில் போர் கப்பல்களும் போர் விமானங்களும் அழிக்கப்பட்டன. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர்.<br>3. இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீதுபோர் பிரகடனம் செய்தது</td><td>2</td></tr>
<tr><td>20</td><td>1. இந்தியாவின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள இலட்சத்தீவு முருகைப் பாறைகளால் ஆனது.<br>2. இத்தீவுகள் சுமார் 32 ச.கி.மீ பரப்பளவை கொண்டதாகும்.<br>3. இதன் நிர்வாகத் தலைநகரம் கவரட்டி ஆகும்</td><td>2<br>(ஏதேனும் இரண்டு)</td></tr>
<tr><td>21</td><td><table><tr><td>பருவம்</td><td>விதைக்கும் காலம்</td></tr><tr><td>சொர்ணவாரி (சித்திரை பட்டம்)</td><td>ஏப்ரல்–மே</td></tr><tr><td>சம்பா (ஆடிப்பட்டம்)</td><td>ஜூலை – ஆகஸ்டு</td></tr><tr><td>நவரை</td><td>நவம்பர்–டிசம்பர்</td></tr></table></td><td>2</td></tr>
<tr><td>22</td><td>அசாம், மேற்குக்கடற்கரை, மேகாலயாவின் தென்பகுதி, திரிபுரா, நாகலாந்து, அருணாச்சலப்பிரதேசம்.</td><td>2<br>(ஏதேனும் நான்கு)</td></tr>
<tr><td>23</td><td>கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே கேரளாவும், வடக்கே ஆந்திரப்பிரதேசமும், வடமேற்கே கர்நாடகாவும், தெற்கே இந்தியப் பெருங்கடலும் தமிழ் நாட்டின் எல்லைகளாக உள்ளது.</td><td>2<br>(ஏதேனும் நான்கு)</td></tr>
<tr><td>24</td><td>1. இந்திய. குடிமகனாய் இருத்தல் வேண்டும்.<br>2. ஐந்து ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதியாய் பணிபுரிந்திருத்தல் வேண்டும்.<br>3. பத்து ஆண்டுகள் உயர்நீதிமன்றத்தின் வழக்குரைஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.<br>4. குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்புமிக்க சட்டவல்லுநராய் இருத்தல் வேண்டும்.</td><td>2<br>(ஏதேனும் இரண்டு)</td></tr>
<tr><td>25</td><td>1. ஆப்கானிஸ்தான் 2. வங்காளதேசம் 3. பூடான் 4. இந்தியா<br>5. நேபாளம் 6. மாலத்தீவு 7. பாகிஸ்தான் 8. இலங்கை</td><td>2</td></tr>
<tr><td>26</td><td>1. பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு அறிந்துகொள்ள பயன்படுகிறது.<br>2. பணவீக்கம் மற்றும் பணவாட்ட்.தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது<br>3. உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது<br>4. வாங்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.<br>5. பொதுத்துறை பற்றி அனைவரும் தெரிந்துகொள்ள பயன்படுகிறது.<br>6. பொருளாதாரத்தை திட்டமிட வழிகாட்டியாகவும் பயன்படுகிறது.</td><td>2<br>(ஏதேனும் இரண்டு)</td></tr>
<tr><td>27</td><td>1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம்<br>2. பொது திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள்<br>3. பிரதமமந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்<br>4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்<br>5. மதிய உணவுதிட்டம்.<br>6. ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம்.</td><td>2<br>(ஏதேனும் இரண்டு)</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 28 | (கட்டாய விடை)<br>1. இந்த வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது.<br>2. இது இந்தியாவில் அமைந்துள்ள சிறப்பு உரிமைகளில்மூலதன சொத்துக்களின் விற்பனையிலிருந்து வரும் வட்டி இலாபங்கள் தொழில் நுட்பசேவைகள் மற்றும் ஈவுத்தொகைகளுக்கான கட்டணம் போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படுகிறது.<br>3. வெளியாட்டு நிறுவனங்கள் பெறும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்றது. | 2<br>(ஏதேனும் இரண்டு) |

## பகுதி– 3

10 x 5 = 50 மதிப்பெண்

| | | |
|---|---|---|
| 29 | 1. இலண்டன்<br>2. செம்மண்<br>3. சூரியஆற்றல்<br>4. நேபாளம்<br>5. எடை குறைப்பு | 5 |
| 30 | **I.ஐரோப்பிய நாடுகளின் அணிசேர்க்கைகளும் எதிர் அணிச்சேர்கைகளும்–**<br>1) மைய நாடுகள்: ஜெர்மனி, ஆஸ்திரியா– ஹங்கேரி, இத்தாலி<br>2) மூவர் கூட்டு நாடுகள்: இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா<br>**II.வன்முறை சார்ந்த தேசியம்:**<br>1. எனதுநாடு சரியோ தவறோ நான் ஆதரிப்பேன்.<br>2. இங்கிலாந்து– ஆரவாரமான நாட்டுப்பற்று.<br>பிரான்ஸ் – அதிதீவிர நாட்டுப்பற்று.<br>ஜெர்மனி – வெறிகொண்ட நாட்டுப்பற்று<br>**III.ஜெர்மனி பேரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு:**<br>1. ஜெர்மனி பேரரசு இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவர் என்றார்.<br>2. இங்கிலாந்து கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது.<br>**IV.பிரான்ஸ் – ஜெர்மனியுடன் கொண்ட பகை:**<br>1. பிரான்ஸ் அல்சேஸ் லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது.<br>**V.பால்கன் பகுதிகளில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு :**<br>1. இளம் துருக்கியர் புரட்சி<br>2. ஆஸ்திரியா செர்பியா மீது படையெடுத்தது.<br>3. ஆஸ்திரியாவிற்கும் செல்பியாவிற்கும் போர் வெடிக்க காரணமாயிற்று.<br>**VI.பால்கன் போர்:**<br>1. தென்மேற்கு ஐரோப்பாவில் துருக்கி வலிமைவாய்ந்த நாடாக திகழ்ந்தது.<br>2. பால்கன் பகுதியில் துருக்கியரும் துருக்கியர் அல்லாதவர்களும் படுகொலையில் ஈடுபட்டனர்.<br>**VII உடனடி காரணங்கள்:**<br>ஆஸ்திரியா இளவரசர் பிரான்ஸ்ஸில் பெர்டினாண்டு படுகொலை செய்யப்பட்டார். | 5<br>(ஏதேனும் ஐந்து) |

<table>
<tr><td>31</td><td>இராஜா ராம்மோகன் ராய் :<br>➢ உடன் கட்டை ஏறுதல் (சதி), பெண்ணடிமைதனம், குழந்தைத் திருமணம், பலதாரமணம் ஆகியவற்றை எதிர்த்தார்.<br>➢ விதவைப் பெண்கள் <u>மறுமணத்தை ஆதரித்தார்.</u><br>ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் :<br>➢ விதவைகளை எரிப்பதும், விதவை மறுமணத்தை தடை செய்வதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதற்கு மறை நூல்களிலிருந்தே சான்றுகளை முன் வைத்தார்.<br>➢ பெண் கல்வியை மேம்படுத்த பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவிகள் செய்தார்.<br>➢ 1856ல் மறுமணச் சீர்திருத்தச் சட்டம் (விதவைகள் மறுமணச் சட்டம்) இயற்றப்படக் காரணமாக அமைந்தது<br>M.G. ரானடே :<br>➢ சாதி மறுப்பு, சமபந்தி, சாதி மறுப்புத் திருமணம் விதவை மறுமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம்.<br>தயானந்த சரஸ்வதி :–<br>➢ குழந்தை திருமணத்தை எதிர்த்தார். விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார்.<br>ஜோதிபா பூலே :<br>➢ குழந்தை திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார். பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு விடுதிகளையும் விதவைகளுக்கு காப்பகங்களையும் உருவாக்கினார்.</td><td>5</td></tr>
<tr><td>32.<br>அ)</td><td>
<table>
<tr><th>(I) வானிலை</th><th>காலநிலை</th></tr>
<tr><td>❖ வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிப்பதாகும்</td><td>ஒரு பகுதியின் நீண்ட கால வானிலை சராசரியின் காலநிலை ஆகும்.</td></tr>
<tr><td>❖ ஓர் இடத்தின் குறுகிய கால வளி மண்டலத்தின் வெப்பம், மேகமூட்டம், வறட்சி, சூரிய ஒளி, காற்று, மழை ஆகிய நிலையைக் குறிக்கிறது.</td><td>காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30 – 35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.</td></tr>
<tr><td>❖ இது ஒவ்வொரு நாளும் மாறிக் கொண்டே இருக்கும்.</td><td>இது மாறாதது.</td></tr>
<tr><th>(II) வண்டல் மண்</th><th>கரிசல் மண்</th></tr>
<tr><td>❖ சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படிய வைப்பதினால் உருவாகின்றன.</td><td>தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட் பாறைகளிலிருந்து உருவானது.</td></tr>
<tr><td>❖ வண்டல் மண், மண்டி, களிமண் போன்ற கலவைகளுடன் மண்ணடுக்குக் காணப்படுகிறது.</td><td>ஈரமாக இருக்கும் போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்கவைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது.</td></tr>
<tr><td>❖ பொட்டாசியம், பாஸ்போரிக் அமிலம், சுண்ணாம்பு மற்றும் கார்பன் கலவைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.</td><td>கால்சியம், மெக்னீசியம், கார்போனேட்டுகள் அதிக அளவிலான இரும்பு, அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு காணப்படுகின்றன.</td></tr>
</table>
</td><td>2<br><br>2</td></tr>
</table>

<table>
<tr><td>ஆ)</td><td>புவி மேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக புவி மேலோடு மடிக்கப்பட்டு மடிப்பு மலைகளாக உருவானது</td><td>1</td></tr>
<tr><td>33</td><td>
<table>
<tr><th></th><th>அடிப்படை உரிமைகள்</th><th>அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்</th></tr>
<tr><td>1</td><td>இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை.</td><td>இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை.</td></tr>
<tr><td>2</td><td>அரசாங்கத்தால் கூட இந்த உரிமையைச் சுருக்கவோ, நீக்கவோ, முடியாது</td><td>இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும்.</td></tr>
<tr><td>3</td><td>இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும்.</td><td>எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப் படுத்த முடியாது.</td></tr>
<tr><td>4</td><td>இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை.</td><td>இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை.</td></tr>
<tr><td>5</td><td>இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன.</td><td>இந்த கொள்கைகளைச் செயற்படுத்தும் பொழுது, சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது.</td></tr>
</table>
</td><td>5</td></tr>
<tr><td>34</td><td>❖ 1905ல் ஏற்பட்ட வங்கப்பிரிவினை முதல் காரணியாகும்.<br>❖ 1906ல் முஸ்லிம் லீக் தோற்றுவிக்கப்பட்டது.<br>❖ 1946 ஆகஸ்ட் 16ஆம் நாளை ஜின்னா நேரடி நடவடிக்கை நாளாக அறிவித்தார். இதனால் கடை அடைப்புகளும் போராட்டங்களும் நடைபெற்றன. அது இந்து முஸ்லீம் மோதலாக உருவெடுத்தது.<br>❖ 1932 ஆகஸ்ட் 16–ம் நாள் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டை ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார்.<br>❖ சிம்லா மாநாட்டிலும் காங்கிரஸும் முஸ்லிம் லீக்கும் ஓர் ஒப்பந்தத்தை எட்டமுடியவில்லை.<br>❖ 1947–ம் ஆண்டு ஜூலை 18–ம் நாள் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விடுதலைச் சட்டம் இயற்றியது.<br>❖ மவுண்டன்பேட்டன் திட்டம்.<br>❖ இவ்வாறு இந்தியாவின் பிரிவினை தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.</td><td>5<br>(ஏதேனும் ஐந்து)</td></tr>
<tr><td>35</td><td>(ஏதேனும் 5 கருத்துருக்கள்)<br>1) இந்திய காலநிலையின் முக்கிய அம்சம்.<br>2) ஜீன்முதல் வாரத்தில் இந்தியாவின் தென்பகுதியில் தொடங்கி ஜூலை மாதத்தில் அனைத்து இந்திய பகுதிகளுக்கும் முன்னேறுகிறது.<br>3) எல்நினோ– மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.<br>இப்பருவக்காற்றின் இடி மின்னலுடன் கூடிய துவக்கம் பருவ மழை வெடிப்பு எனப்படும்<br>இக்காற்று அரபிக்கடல் வழியாகவும் வங்காள விரிகுடா வழியாகவும் வீசுகின்றது.<br>அரபிக்கடல் கிளை–<br>இவை மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குச்சரிவுகளில் மோதி பலத்த மழைப் பொழிவைத்தருகிறது.<br>இக்கிளையானது வட இந்தியாவில் கன மழையை தோற்றுவிக்கிறது.</td><td>5</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **வங்காள விரிகுடா கிளை–**<br>வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை நோக்கி வீசுகிறது.<br>மௌன்சின்ராம் மிகக்கனமழை பெறுகிறது.<br>இக்கிளை 75% மழைப்பொழிவை இந்தியாவிற்கு தருகிறது. | |
| 36 | (ஏதேனும் 5 தலைப்புகள் – விளக்கமுடன்)<br>1) சிறிய மற்றும் குறுநில உடைமை<br>2) அதிக செலவின உள்ளீடு<br>3) வளமற்ற மண்<br>4) நீர்பாசன பற்றாக்குறை<br>5) இயந்திரமயமாக்க பற்றாக்குறை<br>6) மண் அரிப்பு<br>7) வேளாண் சந்தை<br>8) சேமிப்பு கிடங்கு இல்லாமை.<br>9) போக்குவரத்து வசதியின்மை<br>10) மூலதன பற்றாக்குறை | 5 |
| 37 | 1) அமைச்சர்களுக்கு பல்வேறு துறைகள் ஒதுக்கீடு .<br>2) அமைச்சரவை கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் குறித்து முடிவு.<br>3) பல்வேறு துறைகளின் பணிகளை பார்வையிடல்.<br>4) அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத் தலைவருடன் விவாதித்தல்.<br>5) குடியரசுத் தலைவருக்கும் அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.<br>6) சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.<br>7) பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார். நாட்டின் முக்கிய செய்தித்தொடர்பாளராகவும் செயல்படுகிறார். | 5 |
| 38 | **அமைச்சரவை தொடர்பானவை –**<br>முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.<br>1. அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.<br>2. தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.<br>3. அமைச்சரவை கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.<br>4. அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.<br>**ஆளுநர் தொடர்பானவை –**<br>மாநில அரசு வழக்குரைஞர், மாநில தேர்தல் ஆணையர்,அரசுப்பணி தேர்வாணயத்தின் தலைவர், மாநில திட்டக்குழு தலைவர், மாநில நிதிக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் தொடர்பாக, ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்<br>**சட்டமன்றம் தொடர்பானவை–**<br>1. சட்டமன்ற கூட்டுத்தொடரை ஆரம்பிக்கவும், ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு ஆலோசனை.<br>2. சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துதல்.<br>3. சட்டமன்றத்தின் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார். | 5 |

| | | |
|---|---|---|
| 39 | **நேர்மறை தாக்கம் –**<br>1. மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்தியது.<br>2. வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளது.<br>3. அதிகமக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.<br>4. புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய அறிவியல் ஆராய்ச்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.<br>5. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்<br>**எதிர்மறை தாக்கம்–**<br>1. அதிகமான மூலதனமானது நியாயமற்ற ஒழுக்கமற்ற விநியோகிப்பாளர்களை அறிமுகப்படுத்தியது.<br>2. அதிகமான வர்த்தக பரிமாற்றம் இருப்பதால் சுதந்திரமான உள்நாட்டு கொள்கைகள் இழக்கப்படுகிறது<br>3. பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு தேவை என்றாலும் எதிர்மறை சுற்றுச்சூழல் மற்றும் சமூக செலவுகளை அதிகரிக்கும்.<br>4. இயற்கை வளங்கள் அதிகமாக சுரண்டப்படுகிறது.<br>5 சுற்றுச்சூழல் பற்றிய தரங்களும், கட்டுப்பாடுகளும் தளர்க்கப்பட்டன. | 5 |
| 40 | **கருப்பு பணம்:**<br>1. கருப்புச்சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம்.<br>2. செலுத்தப்படாத வரிப்பணம்.<br>3. மறைக்கப்பட்ட , கணக்கிடப்படாத பணம்<br>**கருப்பு பணத்திற்கான காரணங்கள்:**<br>1. பண்டங்கள் பற்றாக்குறை<br>2. உரிமம்பெறும் முறை<br>3. தொழில்துறையின் பங்கு<br>4 கடத்தல்<br>5. வரியின் அமைப்பு | 5 |
| 41 | காலக்கோடு<br>**1920–** கிலாபத் இயக்கம் / ஒத்துழையாமை இயக்கம் / பன்னாட்டு சங்கம் தோற்றம்<br>**1922–** சௌரி சௌரா சம்பவம் / முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு<br>**1923–** சுய ராஜ்ய கட்சியின் தோற்றம்<br>**1927–** சைமன் குழு நியமனம் / வியட்நாம் தேசியக் கட்சி உதயம்<br>**1928–** மோதிலால் நேரு அறிக்கை / சைமன் குழு இந்தியா வருகை.<br>**1929–** லாகூர் காங்கிரஸ் மாநாடு / பொருளாதார பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை<br>**1930–** முதல் வட்ட மேசை மாநாடு / உப்பு சத்தியாக்கிரகம்<br>**1931–** இரண்டாம் வட்ட மேசை மாநாடு / காந்தி இர்வின் ஒப்பந்தம்<br>**1932–** மூன்றாம் வட்ட மேசை மாநாடு / வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் / பூனா . ஒப்பந்தம்<br>**1933–** ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் ஆதல்.<br>**1934–** நீண்ட பயணம்.<br>**1935–**இந்திய அரசு சட்டம் / முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தல்<br>**1937–** மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை . அமைக்கப்படுதல்<br>**1938–** மியூனிச் உடன்படிக்கை<br>**1939–** இரண்டாம் உலகப்போர் தொடக்கம்<br>**1940–** ஆகஸ்ட் நன்கொடை / தனிநபர் சத்தியாக்கிரகம் / பிரிட்டன் போர். | 5 |

| | | |
|---|---|---|
| | | |
| 42 | இந்திய வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது ( கட்டாய விடை) | 5 |

## பகுதி– 4

2 x 8 = 16


| | | |
|---|---|---|
| 43.(அ) | **(ஏதேனும் 8 நிகழ்வுகள்மட்டும்)**<br>(I)<br>1. பன்னாட்டுச் சங்கத்திற்கான கூட்டு ஒப்பந்த ஆவணம் பாரிஸ் அமைதி மாநாட்டில் தயார் செய்யப்பட்டது.<br>2. சவால்கள் நிறைந்த இப்பணி குடியரசுத் தலைவர் உட்ரோவில்சன் கொடுத்த அழுத்தத்தால் நிறைவேறியது<br>3.இவ்வமைப்புக்கான அரசியலமைப்பு விதிகளை உருவாக்கியதில் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆலோசனை மேலோங்கியிருந்தது<br>4.1920ல் தொடங்கப்பட்டது.<br>**பன்னாட்டுச் சங்கத்தின் உறுப்புகள்.**<br>1. பொதுச்சபை, செயற்குழு, செயலகம், பன்னாட்டு நீதிமன்றம், பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு.<br>2. பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் தொடக்கத்தில் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாக இருந்தது.<br>3. பன்னாட்டு சங்கத்தின் செயலகம் ஜெனிவாவில் அமைக்கப்பட்டது.<br>4 பன்னாட்டு நீதிமன்றம் திஹேக்கில் அமைக்கப்பட்டது<br>5. பதினைந்து நீதிபதிகளைக் கொண்டிருந்தது.<br><br>**(II) ஒத்துழையமை இயக்கத்தின் கூறுகள்.**<br>1. பட்டங்கள், பதவிகள் திரும்ப ஒப்படைத்தல்<br>2. அரசின் செயல்பாடுகளில் ஒத்துழைக்காமல் இருத்தல்<br>3. நீதிமன்றங்களை புறக்கணித்தல்.<br>4. சட்டப் பேரவைகளை புறக்கணித்தல்<br>5. அரசு விழாக்களில் பங்கேற்காமை.<br>6 அந்நியப் பொருள்களின் புறக்கணிப்பு<br>7. குடிமைப்பணி அல்லது இராணுவப் பணிகளை ஏற்க மறுப்பது.<br>8. அரசுப் பள்ளிகளில் குழந்தைகளும் அவர்களின் பெற்றோர்களும் புறக்கணிப்பது.<br>**(அல்லது)** | 4<br><br>4 |


| | | |
|---|---|---|
| 43<br>(ஆ) | **பெண்கள் இயக்கங்கள்:**<br>• சென்னை மாகாணத்தில் பெண்களை வலிமை உள்ளவர்களாக மாற்றும் நோக்கத்துடன் பல இயக்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.<br>• அவைகளுள் இந்திய பெண்கள் சங்கம் மற்றும் அகி இந்திய பெண்கள் மாநாடு ஆகியவை முக்கியமானவை.<br>• இந்திய பெண்கள் சங்கம் 1917–ல் அன்னிபெசண்ட், மார்க்ரெட் ஆகியோர்களால் சென்னை அடையாறு பகுதியில் தொடங்கப்பட்டது.<br>• இந்திய பெண்கள் சங்கம், தனி நபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு மற்றும் பொது வாழ்வில் பெண்களின் பங்கு ஆகியவை குறித்து பல்வேறு மொழிகளில் துண்டு பிரசுரங்களையும் செய்தி மடல்களையும் வெளியிட்டுள்ளது<br>• இந்திய பெண்கள் மாநாடு பெண்களின் மேம்பாட்டிற்காக அரசு பல கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்தது. இது பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது.<br>• சுயமரியாதைக் கட்சியினரும் பெண்கள் விடுதலை மற்றும் பாலின சமத்துவத்திற்காகப் பணியாற்றினர்.<br>• முத்துலட்சுமி அம்மையார் நாகம்மை,கண்ணம்மா, நீலாவதி, மூவலூர் இராமாமிர்தம், ருக்மணி அம்மாள், அலமேலு மங்கை தாயாரம்மாள், நீலாம்பிகை மற்றும் சிவகாமி சிதம்பரனார் ஆகியோர் பெண்கள் இயக்கத்தில் இணைந்து தீவிரப் பணியாற்றினார். | 8 |
| 44.அ) | இந்திய வரைபடங்கள் (புவியியல்)<br>இணைக்கப்பட்டுள்ளது.<br><br>**(அல்லது)** | 8 |
| (ஆ) | தமிழக வரைபடம் (புவியியல்)<br>இணைக்கப்பட்டுள்ளது. | |

******

# INDIA MAP - OUTLINE

42. இந்திய வரைபடம்




INDIA MAP - OUTLINE
44. அ. இந்திய வரைபடம்:
காரகோரம்
மலைக் காடுகள்
கங்கை
வண்டல் மண்
மேற்குத் தொடர்ச்சி மலை
தென் மேற்கு
பருவக்காற்று
வீசும் திசை
நெல் விளையும் பகுதி நன்று
பாக் நீர்சந்தி

# TAMIL NADU - OUTLINE

